செ.வெ.எண்: 09/டிசம்பர் நாள் : 05.12.2018

# இராமநாதபுரம் மாவட்டம்

## கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதிக்கு ரூ.1,00,000/-க்கான காசோலை

## மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி அவர்களிடத்தில் மண்டபம் அனைத்து மீன்பிடி விசைப்படகு மீனவர்கள் சங்கத்தை சார்ந்த பிரதிநிதிகள் வழங்கினர்

கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் விதமாக, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (5.12.2018) மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி அவர்களை, மண்டபம் அனைத்து மீன்பிடி விசைப்படகு மீனவர்கள் சங்கத்தை சார்ந்த பிரதிநிதிகள் நேரில் சந்தித்து, நிவாரணத் தொகையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதிக்கு அனுப்பி வைத்திட வேண்டி ரூ.1,00,000/-க்கான காசோலையினை வழங்கினர்.

மேலும், மண்டபம் அனைத்து மீன்பிடி விசைப்படகு மீனவர்கள் சங்கம் சார்பாக தஞ்சாவூர் பகுதி, மல்லிபட்டிணம் கிராமப்பகுதியில் உள்ள மக்களுக்கு சுமார் ரூ.3 இலட்சம் மதிப்பிலான நிவாரண பொருட்களும் 2 லாரிகளில் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது, மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு.இ.காத்தவராயன், உதவி இயக்குநர் திரு.கோபிநாத், மண்டபம் அனைத்து மீன்பிடி விசைப்படகு மீனவர்கள் சங்க தலைவர் திரு.ஜி.கணபதி, செயலாளர் திரு.எம்.ஜாகிர் உசேன், செயல் தலைவர் திரு.பாலசுப்பிரமணியன் உட்பட சங்க பிரதிநிதிகள், மீன்வளத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**